# கீழக்கரை நகர்மன்ற 09.10.2019–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

7–வது மாநில உயர் ஆளுமை கூட்ட நடவடிக்கையிலும் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை நிலை எண்.82, நாள்.26.08.2018–ல் கீழக்கரை நகராட்சிக்கு "Fecal Sludge Septage Management Plant" சுத்திகரிப்பு நிலையம் 20 கிலோ லிட்டர் (20 KLD) கொள்ளளவில் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டு, இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மத்திய அரசு 33 சதவீதம் மற்றும் ஐ.யு.டி.எம். திட்டத்தின் கீழ் 67 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைப்படி, கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் (Fecal Sludge and Septage Management) பள்ளமோர்குளம் கிராமத்தில் அமைந்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கழிவு நீர் சுத்தகரிப்பு அமைப்பு (Fecal Sludge Treatment Plant) அமைக்க ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி IUDM 2018-19 & 2019–2020 மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.340.00 லட்சத்திற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS–2/2018,–1, நாள்.11.12.2018–ன்படி நிர்வாக அனுமதி மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26888/2018/DO2, நாள்.11.12.2018–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 22.01.2019–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடஙகில் கழிவு நீர் சுத்தகரிப்பு அமைப்பு (Fecal Sludge Treatment Plant) மதிப்பீடு ரூ.340.00 லட்சத்திற்கு அமைக்கும் பொருட்டு, 22.01.2019ம் தேதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விலைக்கூறல் (Price Bid) 06.02.2019 மாலை 3.30 மணியளவில் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) திரு.எஸ்.எம்.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பரமக்குடி | – | 16.90% மதிப்பீட்டு தொகையைவிட கூடுதல். |
| 2) திரு.ஆர். பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், முதுகுளத்தூர் | – | 21.74% மதிப்பீட்டு தொகையைவிட கூடுதல் |

மேற்காணும் விபரப்படியான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலில் கூடுதல் விலை விகிதம் (+) 16.90 சதவிகிதம் குறிப்பிட்டுள்ள திரு.எஸ்.எம். சுப்பிரமணியன், பரமக்குடி என்பவருக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட (+) 16.90 சதவிகிதம் கூடுதலாக விலை விகிதம் உள்ளபடியால் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக விலை குறைப்பு செய்து உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு இவ்வலுவலகம் மூலம் 07.02.2019ம் தேதி ஒப்பந்தகாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இதற்கு ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்பிரமணியன் என்பவரால் மதிப்பீட்டுத் தொகைக்கு 4.95 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தம் செய்து கொள்வதாக 14.02.2019ம் தேதி ஒப்பந்தகாரரால் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் விலைகுறைப்பு கடிதத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் இந்நகர்மன்றத்தில் 18.02.2019ம் தேதி அங்கீகாரம் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற (மதுரை கிளை) வழக்கு WP(MD) No.4372 of 2019 & WMP(MD) No.3479 & 3480 of 2019, நாள்.04.03.2019–ன்படி ஒப்பந்ததாரரால் வழக்கு தொடரப்பட்டு வழங்கப்பட்ட தீர்ப்புரையின்படி பள்ளமோர்குளம் கிராமம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு Fecal Sludge and Septage Management-Fecal Sludge Treatment Plant) 20KLD அமைக்கும் பணிக்கு ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்பிரமணியன், பரமக்குடி என்பவருக்கு மேற்காணும் பணிக்கு 06.03.2019–ந்தேதி பணி உத்திரவு (Work Order ) வழங்கப்பட்டது. பின்பு ஒப்பந்த உடன்படிக்கை (Agreement) செய்து கொள்ளப்பட்டது.

ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்பிரமணியன், பரமக்குடி என்பவருக்கு 06.03.2019–ந் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டு 3 மாதங்கள் கடந்து விட்ட நிலையில் பணி ஒப்பந்தத்தின்படி குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை துவங்காமல் காலதாமதம் செய்து வந்ததால். திட்டப்பணியை உரிய காலத்திற்கு முடித்து கொடுக்குமாறு 12.06.2019–ந்தேதி முதல் அறிவிப்பு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து 5 மாதங்கள் கடந்து விட்ட நிலையில் தொடக்க வேலையை **Jungle Clearance** மற்றும் இடத்தினை சமப்படுத்தும் பணி மட்டுமே ஒப்பந்ததாரர் செய்துள்ள நிலையில் 22.08.2019–ந் தேதி இரண்டாவது அறிவிப்பும் அதனை தொடர்ந்து 6 மாதங்கள் கடந்து விட்ட நிலையில் 13.09.2019–ந் தேதி மூன்றாவது இறுதி அறிவிப்பும் செய்யப்பட்டது. ஆனால், ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம். சுப்பிரமணியன், பரமக்குடி என்பவர் மேற்காணும் பணியினை உரிய காலத்திற்குள் துவங்காமல் இருந்து கொண்டு இவ்வலுவலகம் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்புகளுக்கு கூறிய பதில் விளக்கத்தினையே வேண்டுமென்றே திரும்ப திரும்ப தெரிவித்து வந்ததால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவின்படி, உடனடியாக பணியினை துவக்கி முடித்துக் கொடுக்குமாறும், தவறும் பட்சத்தில் பொது நன்மை கருதியும், அத்தியாவசிய பொதுசுகாதார செயல்பாட்டை உறுதி செய்ய வேண்டிய சூழல் இருக்கின்ற நிலையில் பணி ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்த விதிகளின்படியும், இவ்வலுவலகம் மூலம் 06.03.2019–ம் தேதி வழங்கப்பட்ட பணி உத்திரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என்று 30.09.2019–ந் தேதி இறுதியாக அறிவுறுத்தி ஒப்பந்ததாரருக்குஅறிவிப்பு செய்யப்பட்டது.

ஆனால் ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்பிரமணியன், பரமக்குடி என்பவருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு 7–மாதங்கள் ஆகியும் இத்திட்டப்பணியை துவங்காமல் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு செல்வதில் காலம் கடத்தி தாமதம் செய்வதற்கும், இந்நகராட்சிக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மேற்காணும் பணிகள் உரிய காலத்திற்குள் முடிக்காததால், பொது நன்மை கருதியும், அத்தியாவசிய பொதுசுகாதார செயல்பாட்டை உறுதி செய்ய வேண்டிய சூழல் இருக்கின்ற நிலையில் ஒப்பந்த நடைமுறை விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பொருட்டு ஒப்பந்தாரர் திரு.எஸ்.எம்.சுப்பிரமணியன், பரமக்குடி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்திரவினை நகர் மன்றத்தில் ஒப்புதல் பெற்று ரத்து செய்யவதற்கு, இந்நகராட்சிப் பொறியாளரால் 04.10.2019–ந் தேதி குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 1022/2018/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

இந்நகராட்சிக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மேற்காணும் பணிகள் உரிய காலத்திற்குள் முடிக்காததால், பொது நன்மை கருதியும், அத்தியாவசிய பொதுசுகாதார செயல்பாட்டை உறுதி செய்ய வேண்டிய சூழல் இருக்கின்ற நிலையில் ஒப்பந்த நடைமுறை விதிகளின்படி ஒப்பந்ததாரர் திரு.எஸ். சுப்பிரமணியன், பரமக்குடி என்பவருக்கு வழங்கப்பட்ட பணி உத்திரவினை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.631அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள் :2</u>

கீழக்கரை நகராட்சி ஆணையாளர் அவர்களின் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் Mahindra Bolero LX 2WD 7STR TN-65 E-8373 நிர்ணயிக்கப்பட்ட உபயோக 10 ஆண்டுகளில் 13ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. மேலும், நிர்ணயிக்கப்பட்ட உபயோக கி.மீ. 2,50,000 முடிவுற்றதாலும், மேலும் தற்பொழுது வரை சுமார் 2,73,430கி.மீ தொடர்ந்து ஒடியுள்ளதாலும் ஈப்பு வாகனத்தின் செயல்திறன் குறைந்து அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதன் மூலம் எரிபொருள்

மற்றும் பராமரிப்பு செலவினங்கள் அதிகமாகிறது. ஆகையால் இந்த ஈப்பு வாகனம் எண். TN-65 E-8373- கழிவு செய்ய துாரம் காலம் கடந்துள்ளதால் தொழில் நுட்ப வல்லுநர் குழுவின் ஆய்வு செய்யப்பட்டு வாகனத்தை முதிர்ந்த நிலையில் கழிவு செய்ய இயக்குநர், மோட்டார் வாகனம் பராமரிப்புத் துறை, வேளச்சேரி, சென்னை–42 அவர்களின் கடிதம் மூ.மு.செ.மு.ஆ.எண். H1/13954/2018 நாள்.17.12.2018ன்படி உத்திரவிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சி 2.459 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டு 21 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகராட்சிக்கு மாலாங்குண்டு மற்றும் சேதுக்கரை குடிநீர் தலைமை நீரேற்று நிலையங்களும், பள்ள மோர்க்குளம் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தும் வகையில் உரக்கிடங்கும் அமைந்துள்ளது. இப்பகுதிகள் இந்நகருக்கு சுமார் 15 முதல் 20 கிலோ மீட்டர் வெளியே அமைந்துள்ளது. மேற்கண்ட பகுதிகளுக்கு அவ்வப்போது குடிநீர் ஆதாரங்களைப்பற்றி தெரிந்து கொள்ளவும், திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாடுகள் பற்றி தெரிந்து கொள்ளவும் செல்ல வேண்டியுள்ளது. மேலும், இந்நகராட்சி பகுதியில் நடக்கும் சுகாதார பணிகள் மற்றும் திட்டப்பணிகளையும் ஆய்வு செய்யவும், மேலதிகாரிகளால் நடத்தப்படும் ஆய்வு கூட்டத்திற்கு செல்லவும் ஈப்பு வாகனம் மிகவும் அத்தியாவசிய தேவையாகிறது. இதனை கருத்தில் கொண்டு பழைய ஈப்பு வாகனம் எண். TN-65 E-8373-ஐ முதிர்ந்த நிலையில் கழிவு செய்து இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக ஈப்பு வாகனம் Mahindra BOLERO ZLX Power + BSIV AC PS 7STR ABS AB வாங்குவதற்கு **(GeM Govt. e Market Place)** விலைப்பட்டியலின்படி வாகன மதிப்பு, காப்பீட்டு கட்டணம், சாலைவரி மற்றும் இதர கட்டணங்கள் ரூ.10.39 இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வாங்குவதற்கு உரிய வழிமுறையாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.950/ 2017/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.632அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :3</u>**

**கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் துப்புரவு பணிகளின் போது பயன்படுத்தப்படும் கிருமி நாசினி பொருட்களான சுண்ணாம்புத்தூள், பிளிச்சிங்பவுடர், ஈமருந்து (நூவான்) மற்றும் பினாயில் போன்ற பொருட்கள் வாங்கி வழங்கிட இவ்வலுவலக துப்புரவுபணி மேற்பார்வையாளர்களால் தேவைப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகர் பொதுசுகாதார நலனை கருதியும் துப்புரவு பணியின் அவசியம் கருதியும் பஸ்நிலையம், மீன்மார்க்கெட், தினசரிமார்க்கெட், குப்பைகள் அகற்றும் குப்பை பெட்டி உள்ள பகுதிகளிலும், சமுதாய / பொதுகழிப்பிடங்கள் மற்றும் கழிவுநீரேற்றும் பகுதிகளில் மேற்கண்ட கிருமி நாசினி பொருட்கள் பயன்படுத்துவதற்கு அரசு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கி தருமாறு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு அதற்கான உத்தேச**

செலவினம் ரூ. 5,00,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு துப்புரவு ஆய்வாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

(ந.க.எண் எச்1/1189/2018)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | – | 10 | டன் |
| 2. | பிளிச்சிங் பவுடர் | – | 5 | டன் |
| 3. | பினாயில் | – | 500 | லிட்டர் |
| 4. | ஈ மருந்து நூரவான் | – | 50 | லிட்டர் |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. உத்தேச செலவினம் ரூ.5,00,000/— ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

2. பொதுசுகாதார நலன் கருதி கிரிமி நாசினி பொருட்கள் அரசு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.633அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள் :4</u>

தூய்மை இந்தியா திட்டம் — திடக்கழிவு மேலாண்மை (Swatch Bharat mission - SWM) 2018—2019—ம் ஆண்டு திட்டம் 8—வது மாநில உயர்மட்ட குழு கூட்ட அனுமதியின்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.1191/பி3/2019 நாள்.21.01.2019—ந் தேதிய நிர்வாக அனுமதியின் அடிப்படையில் இந்நகராட்சி பழைய மற்றும் புதிய உரக்கிடங்கில் ஏற்கனவே உள்ள 11350 Cum குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுதல் பணிக்கு ரூ.75.00 இலட்சத்திற்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகள் இந்நகர் மன்ற தீர்மான எண்.508 நாள்.22.01.2019—ன்படி அனுமதி பெறப்பட்டு, விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறும் பொருட்டு, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை தலைமை பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதில் கல்வி தலைவர் அண்ணா பல்கலைக்கழகம், திண்டுக்கல் அவர்கள் மூலம் வழங்கப்பட்ட கூர்ந்தாய்வு அறிக்கையின்படி (Change Point Survey) இந்நகராட்சி பழைய மற்றும் புதிய உரக்கிடஙகில் ஏற்கனவே உள்ள 9350 Cum குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுதல் (Bio Mining Process) ரூ. 63.00 இலட்சத்திற்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.18281/2018/DO1 நாள்.30.01.2019—ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் பணிகளுக்கு 26.02.2019ம் தேதி மாநில அளவில் இவ்வலுவலக கடிதம் 1224/2018/இ1, நாள்.31.01.2019ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இந்நிலையில் மேற்படி பணிக்கு திண்டுக்கல் அண்ணா பல்கலைக் கழக கல்வித் தலைவரால் 18.01.2019ம் தேதி வழங்கப்பட்ட கூர்ந்தாய்வு அறிக்கையின்படி தயார்

செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீட்டின் சரித்தன்மையை சென்னை, அண்ணா பல்கலைக் கழக சுற்றுச்சூழல் ஆய்வுகள் மையம் மூலம் மூன்றாம் நபர் அறிக்கையாக பெறுவதற்கு, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக செயற்பொறியாளரால் தெரிவிக்கப் பட்டுள்ளதாக இந்நகராட்சி பணிமேற்பார்வையாளரால் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதன்படி, சென்னை அண்ணா பல்கலைக் கழக சுற்றுச்சூழல் ஆய்வுகள் மையம், இயக்குநர் அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண். 1224/2018/இ, நாள்.11.02.2019–ன்படி கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நகராட்சியில் ஏற்கனவே உள்ள 9350 Cu.m குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுதல் (Bio Mining Process) ரூ.63.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள திண்டுக்கல் அண்ணா பல்கலைக் கழக கல்வித் தலைவரால் 18.01.2019ம் தேதி வழங்கப்பட்ட கூர்ந்தாய்வு அறிக்கையின்படி தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீட்டின் சரித்தன்மை ஆய்வு செய்யப்பட்டது. அதற்குரிய ஆய்வுக் கட்டணம் சென்னை, அண்ணா பல்கலைக் கழக சுற்றுச்சூழல் ஆய்வுகள் மையம், இயக்குநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து இந்நகராட்சியில் நடைபெற்று வரும் குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றும் (Bio Mining Process) பணிகளுக்குரிய தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து வழிகாட்டுதல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசனை (Project Management Consultant) கட்டணம் ரூ. 3,00,000/– கூடுதல் GST கட்டணம் 18% ரூ.54,000/– ஆக மொத்தம் ரூ.3,54,000/– மட்டும் சென்னை, அண்ணா பல்கலைக் கழக சுற்றுச்சூழல் ஆய்வுகள் மையம், இயக்குநர் அவர்களுக்கு வங்கி கேட்பு வரைவோலை மூலமாக வழங்குமாறு சென்னை, அண்ணா பல்கலைக் கழக சுற்றுச்சூழல் ஆய்வுகள் மையம், இயக்குநர் அவர்களின் கடிதம் எண். CES/DIR/Keelakarai Municipality/2019-20, நாள்.11.07.2019–ன்படியானது இந்நகராட்சிக்கு 16.07.2019–ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.3,54,000/– மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை (Swatch Bharat mission - SWM) 2018–2019–ம் ஆண்டு திட்டத்தில் மேற்காணும் பணிக்கு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யாததால், நிர்வாக நலனை கருத்தில் கொண்டு குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றும் (Bio Mining Process) பணிகளுக்குரிய தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து வழிகாட்டுதல் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசனை (Project Management Consultant) கட்டணம் ரூ.3,54,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் பணிக்கு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் ரூ.3,54,000/—ஐ ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.634அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, 16 மற்றும் 21 ஆகிய மூன்று இடங்களில் அமைந்துள்ள கழிவுநீர் பம்பிங் ஸ்டேசனில் பொருத்தப்பட்டுள்ள 10HP மற்றும் 5HP மின்மோட்டார் கழிவுநீர் பம்புகளில் பழுதுகள் ஏற்படும் போது பழுது நீக்கம் செய்வதற்கு காலதாமதமாகும் சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் கழிவுநீர் வாறுகாலில் இருந்து வெளியேறும் நிலையில் உள்ளதால் மாற்று கழிவுநீர் மின்மோட்டார் மற்றும் பம்ப் (Spare Motors & Pump) வாங்கித் தருமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது.

1) **10HP** மின்மோட்டார் & கழிவுநீர் பம்ப் - 2 எண்ணம்
   **(KIRLOSKAR** MAKE SP4L PUMP)
2) **5HP** மின்மோட்டார் & கழிவுநீர் பம்ப்
   (KIRLOSKAR MAKE SP3L PUMP) - 1 எண்ணம்

மேற்காணும் மூன்று கழிவு நீர் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள் வாங்கி பொருத்தப்பட்டு பலவருடங்களான நிலையில் அடிக்கடி மோட்டார் பழுது ஏற்பட்டு கழிவுநீர் வாறுகால் மூலம் வெளியேற இயலாமல் சாலையில் செல்வதால், பொதுமக்கள் சாலையை கடப்பதற்கு மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். ஆகவே, அவசர அவசியம் கருதி கழிவுநீர் மின்மோட்டார் மற்றும் பம்ப் (Motors & Pump) புதிதாக வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு 19.09.2019—ந் தேதி வரப்பெற்ற விலைப்புள்ளியை இந்நகர்மன்றத்தில் 27.09.2019—ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.2,60,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் ஒப்புதலுக்கு முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண். 771/2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.2,60,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.635அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :6**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.116/செமதொ/2019, நாள்.22.07.2019—ல் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் மாலைமலர் தொழில்மலர்—2019ல் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கட்டணம் ரூ.14700/—க்கு பட்டியல் எண்.MDU-D19080277 நாள்.31.08.2019—ன் படியானது

இந்நகராட்சிக்கு 10.09.019-ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.14,700/- மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.425/2017/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1) மாலைமலர் நாளிதழ் விளம்பர கட்டணம் ரூ.14,700/-யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதியின்படி பட்டியல் தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.636 அனுமதிக்கப்பட்டது.</u>

ஒம்/- ஆ. தனலெட்சுமி,பி.காம்
தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி.